ஆண்டு 2015

# தமிழ் மொழிப் பாடத்திட்டம்

Lakshmi Tamil Learning Center

லட்சுமி தமிழ் பயிலும் மையம்

லட்சுமி தமிழ் பயிலும் மையம்
அட்லாண்டா, ஜியார்ஜியா, அமெரிக்கா

# உள்ளடக்கம்


1 முன்னுரை ..... 3

2 பாடத் திட்டவரை ..... 4

2.1 தொடக்க நிலை (பாலர் நிலை - வகுப்பு 6) ..... 4

2.2 உயர் நிலை (வகுப்புகள் 7 - 10) ..... 8

3 கற்றல் விளைவுகள் ..... 11

3.1 தொடக்க நிலை (பாலர் நிலை - வகுப்பு 6) ..... 11

3.2 உயர் நிலை (வகுப்புகள் 7 - 10) ..... 14

4 நூல் மூலங்கள் ..... 15

5 மதிப்பீட்டு முறைகள் ..... 16

# பாடத்திட்டம்

## 1 முன்னுரை

இப்பள்ளியின் பாடத்திட்டம் அட்லாண்டா வாழ் தமிழ் மாணவர்களின் கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் ஆகிய நான்கு திறன்களை வளர்க்கும் முறையில் வடிவமைக்கப்பட்டது. மேலும் இங்கு பயிலும் மாணவர்கள் தமிழ்க் கலாச்சாரம், பண்பாடு, நாகரிகம் முக்கியமாகத் தமிழர்களின் வரலாற்றையும் அறிந்து கொள்ள முடிகிறது.

பாலர் பள்ளி மாணவர்களுக்கு "மாண்டிசோரி" (Montessori) முறையில் போதிக்கப்படுகிறது. இதனால் அவர்களின் அடிப்படை மொழி அறிவு நன்கு வலுப்படுகிறது. மேல் நிலை மாணவர்களுக்கு இயல், இசை, நாடகம், இலக்கணம் ஆகியவை கற்றுக் கொடுக்கப்படுகின்றன. பாடங்கள் மாணவர்களின் அறிவுத்திறனை மேம்படுத்துபவையாக உள்ளன.

சிங்கப்பூர் தமிழ்ப்பள்ளிப் பாடத்திட்டம் 1 வரை 10 வரையிலான வகுப்புகளில் பின்படுத்தப்படுகிறது. மேலும் தமிழ்நாட்டுப் பாடப்புத்தகங்கள், தமிழ் இணையப் பல்கலைக்கழகம், பல தரமான தமிழ்க் கல்வி இணைய தளங்கள் ஆகியவற்றிலிருந்தும் பாடங்கள் அவ்வப்பொழுது சொல்லிக்கொடுக்கப்படுகின்றன. முக்கியமாகக் காலத்திற்கேற்றாற் போல் கணிணி மூலமும் எமது பள்ளியின் கல்விச் சேவை நடைபெறுகிறது.

ஒவ்வொரு கல்வியாண்டிலும் இரு பருவங்கள் உள்ளன. வார இறுதிகளில் மட்டுமே வகுப்புகள் நடத்தப்படுகின்றன. கிட்டத்தட்ட 32 வகுப்புகள் கொண்டதாக இருக்கும் ஒரு கல்வியாண்டு. ஒவ்வொரு வகுப்பும் 75 மணித்துளிகள் நீடிக்கும்.

# 2 பாடத் திட்டவரை

## 2.1 தொடக்க நிலை (பாலர் நிலை - வகுப்பு 6)

| பாடத் திட்டவரை - தொடக்க நிலை (பாலர் நிலை - வகுப்பு 6) | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| **எண்** | **தலைப்பு** | **பாலர் நிலை** | **வகுப்பு 1** | **வகுப்பு 2** | **வகுப்பு 3** | **வகுப்பு 4** | **வகுப்பு 5** | **வகுப்பு 6** |
| 1. | எழுத்துகள் - உயிர், ஆய்தம், வல்லின / மெல்லின / இடையின வரிசை, வடமொழி எழுத்துகள் | ✓ | | | | | | |
| 2. | ஒவ்வொரு நிலையிலும் கற்ற எழுத்துகளைப் பயன்படுத்தி எளிய சொற்களையும், வாக்கியங்களையும் வாசித்தல் | ✓ | | | | | | |
| 3. | ஒளிக்காட்டல்கள் மூலம் சொல்வளம் பெருக்குதல் | ✓ | | | | | | |
| 4. | **எண்கள்** | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | |
| 5. | **நிறங்கள்** | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | |
| 6. | **நல் வழக்கங்கள்** | ✓ | ✓ | ✓ | | | | |
| 7. | உடல் உறுப்புக்கள் | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | | |
| 8. | குடும்பம் / உறவுகள் | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | |
| 9. | காய்கறிகள், பழங்கள், பூக்களின் பெயர்கள் | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | |
| 10. | விலங்குகள், பறவைகள், பூச்சிகளின் பெயர்கள் | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | |
| 11. | இயற்கை, வீடு, பள்ளி சம் பந்தமான, அன்றாட உபயோகத்தில் உள்ள சொற்கள் | ✓ | ✓ | ✓ | | | | |
| 12. | செயல் / கட்டளைச் சொற்கள் | ✓ | ✓ | | | | | |
| 13. | கேள்விச்சொற்கள் | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | |

| பாடத் திட்டவரை - தொடக்க நிலை (பாலர் நிலை - வகுப்பு 6) | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| எண் | தலைப்பு | பாலர் நிலை | வகுப்பு 1 | வகுப்பு 2 | வகுப்பு 3 | வகுப்பு 4 | வகுப்பு 5 | வகுப்பு 6 |
| 14. | எதிர்ச்சொற்கள் | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | |
| 15. | ஆண்பால் / பெண்பால் | | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | |
| 16. | குறில் / நெடில் | | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | |
| 17. | ஒருமை / பன்மை | | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | |
| 18. | வாக்கியம் உருவாக்குதல் | | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | |
| 19. | காலங்கள் | | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ |
| 20. | திசைகள் | | ✓ | | | | | |
| 21. | விலங்குகள், பறவைகளின் ஒலிகள் | | ✓ | ✓ | ✓ | | | |
| 22. | வேற்றுமை உருபுகள் | | | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ |
| 23. | கிழமைகள் | | | ✓ | ✓ | ✓ | ✓ | |
| 24. | தமிழ் மாதங்கள் | | | ✓ | ✓ | | | |
| 25. | சுவைகள் | | | ✓ | ✓ | ✓ | ✓ | |
| 26. | ‘கீழே’, ‘மேலே’, ‘உள்ளே’, ‘வெளியே’, ‘முன்னால்’, ‘பின்னால்’ | | | ✓ | ✓ | ✓ | ✓ | |
| 27. | ஒலி வேறுபாட்டுச் சொற்கள் - ர/ற, ன/ண, ல/ள/ழ | | | ✓ | ✓ | ✓ | ✓ | |
| 28. | பெயர்ச்சொல், சுட்டுப்பெயர், வினைச்சொல் | | | | ✓ | ✓ | ✓ | |
| 29. | பெயரடை மொழி / வினையடை மொழி | | | | ✓ | ✓ | ✓ | ✓ |
| 30. | எதிர்மறைக் கட்டளைகள் | | | | ✓ | ✓ | ✓ | |
| 31. | ‘ஆம்’, ‘இல்லை’, ‘ஆனால்’, ‘அதனால்’, ‘ஏனென்றால்’ | | | | ✓ | ✓ | ✓ | |
| 32. | ‘உம்’ | | | | ✓ | ✓ | ✓ | |
| 33. | ‘விட’ | | | | ✓ | ✓ | ✓ | |
| 34. | இரட்டைக்கிளவி | | | | ✓ | ✓ | ✓ | ✓ |
| 35. | நிறுத்தற்குறிகள் | | | | ✓ | ✓ | ✓ | ✓ |

## பாடத் திட்டவரை - தொடக்க நிலை (பாலர் நிலை - வகுப்பு 6)

| எண் | தலைப்பு | பாலர் நிலை | வகுப்பு 1 | வகுப்பு 2 | வகுப்பு 3 | வகுப்பு 4 | வகுப்பு 5 | வகுப்பு 6 |
|---|---|---|---|---|---|---|---|---|
| 36. | தொழிற்பெயர்கள் | | | | ✓ | ✓ | ✓ | |
| 37. | விலங்குகள், பறவைகளின் இளமைப் பெயர்கள் | | | | | ✓ | ✓ | |
| 38. | ஒரு பொருள் / பல சொற்கள் | | | | | ✓ | ✓ | ✓ |
| 39. | ஒரு சொல் / பல பொருள் | | | | | ✓ | ✓ | ✓ |
| 40. | பெயரெச்சம் / வினையெச்சம் | | | | | ✓ | ✓ | ✓ |
| 41. | சொற்களைப் பிரித்தல் / இணைத்தல் | | | | | ✓ | ✓ | ✓ |
| 42. | அடுக்குத்தொடர் | | | | | ✓ | ✓ | ✓ |
| 43. | ஒரு / ஓர் பயன்பாடு | | | | | | ✓ | ✓ |
| 44. | எழுவாய், பயனிலை, செயப்படு பொருள் | | | | | | ✓ | ✓ |
| 45. | எச்சவினை | | | | | | | ✓ |
| 46. | வாக்கிய இணைப்பு | | | | | | | ✓ |
| 47. | குறுக்கெழுத்துப் பயிற்சிகள் | | | | | | | ✓ |
| 48. | மழலைப்பாடல்கள் | ✓ | ✓ | | | | | |
| 49. | பாரதியார் பாடல்கள் | | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ |
| 50. | ஆத்திச்சூடி | ✓ | ✓ | ✓ | | | | |
| 51. | திருக்குறள் | | | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ |
| 52. | கொன்றை வேந்தன் | | | | ✓ | ✓ | | |
| 53. | உலக நீதி | | | | ✓ | | | |
| 54. | வெற்றிவேற்கை | | | | | ✓ | | |
| 55. | நல்வழி | | | | | | | ✓ |
| 56. | பழமொழிகள் | | | | | ✓ | ✓ | ✓ |
| 57. | எளிய உரையாடல்கள் | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ |
| 58. | பேசுவதற்கான தலைப்புகள் | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ |
| 59. | கதை கூறுதல் | ✓ | ✓ | | | | | |
| 60. | கதை வாசித்தல் | | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ |

| பாடத் திட்டவரை - தொடக்க நிலை (பாலர் நிலை - வகுப்பு 6) | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| எண் | தலைப்பு | பாலர் நிலை | வகுப்பு 1 | வகுப்பு 2 | வகுப்பு 3 | வகுப்பு 4 | வகுப்பு 5 | வகுப்பு 6 |
| 61. | வாசிப்புக் கருத்தறிதல் | | | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ |
| 62. | கட்டுரை எழுதுதல் | | | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ |
| 63. | கடிதம் எழுதுதல் | | | | | ✓ | ✓ | ✓ |
| 64. | வாசிப்பு / பேச்சுப் போட்டிகள் | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ |
| 65. | காட்டியங்கள் | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ |
| 66. | கலை நிகழ்ச்சிகள் | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ |

## 2.2 உயர் நிலை (வகுப்புகள் 7 - 10)

| பாடத் திட்டவரை - உயர் நிலை (வகுப்புகள் 7 - 10) | | | | | |
|---|---|---|---|---|---|
| எண். | தலைப்பு | வகுப்பு 7 | வகுப்பு 8 | வகுப்பு 9 | வகுப்பு 10 |
| 1. | ஒரு / ஓர் பயன்பாடு | ✓ | | | |
| 2. | ஒலி வேறுபாட்டுச் சொற்கள் - ர/ற, ன/ண, ல/ள/ழ | ✓ | ✓ | | |
| 3. | நிறுத்தற்குறிகள் | ✓ | | | |
| 4. | ஒரு சொல் / பல பொருள் | ✓ | ✓ | | |
| 5. | எச்சவினை | ✓ | | | |
| 6. | காலங்கள் | ✓ | ✓ | ✓ | |
| 7. | எழுவாய், பயனிலை, செயப்படு பொருள் | ✓ | ✓ | | |
| 8. | பெயரடை மொழி / வினையடை மொழி | ✓ | | | |
| 9. | வேற்றுமை உருபுகள் | ✓ | ✓ | | |
| 10. | வாக்கிய இணைப்பு | | | | |
| 11. | இரட்டைக்கிளவிகள் | ✓ | ✓ | ✓ | |
| 12. | குறுக்கெழுத்துப் பயிற்சிகள் | ✓ | | | |
| 13. | ஓரெழுத்து / ஒரு மொழி | ✓ | | | |
| 14. | உவமைத்தொடர்கள் | ✓ | ✓ | ✓ | ✓ |
| 15. | அறுவகைப் பெயர்கள் | ✓ | | | |
| 16. | மூவிடப் பெயர்கள் | ✓ | ✓ | | |
| 17. | பதிலிடு பெயர்கள் | ✓ | | | |
| 18. | செய்வினை / செயப்பாட்டு வினை | ✓ | | ✓ | |
| 19. | வல்லொற்று மிகும் / மிகா இடங்கள் | ✓ | ✓ | ✓ | ✓ |
| 20. | இணைப்புச் சொற்கள் | ✓ | | | |
| 21. | தெரிநிலை வினைமுற்று / குறிப்பு வினைமுற்று | ✓ | | | |

| பாடத் திட்டவரை - உயர் நிலை (வகுப்புகள் 7 - 10) | | | | | |
|---|---|---|---|---|---|
| எண். | தலைப்பு | வகுப்பு 7 | வகுப்பு 8 | வகுப்பு 9 | வகுப்பு 10 |
| 22. | மரபுத்தொடர்கள் | ✓ | ✓ | ✓ | ✓ |
| 23. | இணைமொழிகள் | | ✓ | ✓ | ✓ |
| 24. | எதிர்மறைப் பெயெரெச்சம் / எதிர்மறை வினையெச்சம் | | ✓ | | |
| 25. | கருத்து மாறா வாக்கியங்கள் | | ✓ | ✓ | ✓ |
| 26. | சொற்புணர்ச்சி | | ✓ | ✓ | ✓ |
| 27. | எண்ணுப்பெயர் / அளவைப்பெயர் | | ✓ | | |
| 28. | வினையாலணையும் பெயர் | | | ✓ | |
| 29. | தன்வினை / பிறவினை | | | ✓ | |
| 30. | வேற்றுமை விரி / தொகை | | | ✓ | |
| 31. | வாக்கியம் அமைத்தல் | | | ✓ | |
| 32. | கால நிறைவு | | | ✓ | |
| 33. | வாக்கிய விரிவு | | | | ✓ |
| 34. | வாக்கிய மாற்றம் | | | | ✓ |
| 35. | நல்வழி | | | | |
| 36. | திருக்குறள் | ✓ | ✓ | ✓ | ✓ |
| 37. | நான்மணிக்கடிகை | | | | ✓ |
| 38. | அறநெறிச்சாரம் | | | | ✓ |
| 39. | பாரதிதாசன் கவிதை | | | | ✓ |
| 40. | பழமொழிகள் | ✓ | ✓ | ✓ | ✓ |
| 41. | வாசிப்புக் கருத்தறிதல் | ✓ | ✓ | ✓ | ✓ |
| 42. | கட்டுரை எழுதுதல் | ✓ | ✓ | ✓ | ✓ |
| 43. | கடிதம் எழுதுதல் | ✓ | ✓ | ✓ | |
| 44. | மதிப்புரை எழுதுதல் | | | ✓ | ✓ |
| 45. | கதை எழுதுதல் | | | | ✓ |
| 46. | வாசிப்பு / பேச்சுப் போட்டிகள் | ✓ | ✓ | ✓ | ✓ |
| 47. | காட்டியங்கள் | ✓ | ✓ | ✓ | ✓ |

| பாடத் திட்டவரை - உயர் நிலை (வகுப்புகள் 7 - 10) | | | | | |
|---|---|---|---|---|---|
| எண். | தலைப்பு | வகுப்பு 7 | வகுப்பு 8 | வகுப்பு 9 | வகுப்பு 10 |
| 48. | கலை நிகழ்ச்சிகள் | ✓ | ✓ | ✓ | ✓ |

## 3 கற்றல் விளைவுகள்

### 3.1 தொடக்க நிலை (பாலர் நிலை - வகுப்பு 6)

| கற்றல் விளைவுகள் - முதல் வகுப்பின் இறுதியில் | | | |
|---|---|---|---|
| **கேட்டல்** | **பேசுதல்** | **படித்தல்** | **எழுதுதல்** |
| மாணவர்கள் எழுத்துகளின் உச்சரிப்பு, எளிய சொற்கள், சொற்றொடர்கள், கட்டளைகள், மழலைப்பாடல்கள், கதைகள் இவற்றைக் கேட்டுப் புரிந்து கொள்வர். | மாணவர்கள் எளிய கேள்விகள், கட்டளைகளைப் புரிந்து கொண்டு பதிலளிப்பர். படங்கள், பொருட்கள் இவற்றைப் பார்த்துப் பேசுவர். கொடுக்கப்பட்ட தலைப்புகளில் பேசுவர். கதைகள் சொல்வர். மழலைப்பாடல்கள் பாடுவர், ஆத்திச்சூடி ஒப்பிப்பர். | மாணவர்கள் எழுத்துகளை அடையாளம் கண்டு, எளிய சொற்களையும், வாக்கியங்களையும் வாய்விட்டுப் படிப்பர். | மாணவர்கள் எழுத்துக்களைச் சரியாகவும், தெளிவாகவும் எழுதுவர். படத்துக்கேற்ற எளிய சொற்களை எழுதுவர். எளிய வாக்கியங்களை உதவியுடன் எழுதுவர். |

| கற்றல் விளைவுகள் - மூன்றாம் வகுப்பின் இறுதியில் | | | |
|---|---|---|---|
| **கேட்டல்** | **பேசுதல்** | **படித்தல்** | **எழுதுதல்** |
| மாணவர்கள் ஒலி வேறுபாடுகளை உணர்வர், கூடுதல் சொற்கள், வாக்கியங்கள், உரையாடல்கள், அறிவிப்புகள், பாடல்கள், கதைகள் ஆகியவற்றைக் கேட்டுப் புரிந்து கொள்வர். | மாணவர்கள் படங்களையும், காட்சிகளையும் பார்த்துச் சரளமாகப் பேசுவர். பார்த்த இடங்களையும், நடைபெற்ற நிகழ்ச்சிகளையும் விவரிப்பர். கொடுக்கப்பட்ட தலைப்புகளில் பேசுவர். கதை சொல்வர். நடித்துக் காட்டுவர். திருக்குறள், கொன்றை வேந்தன், உலக நீதி போன்றவற்றை ஒப்பிப்பர். | மானவர்கள் எளிய உரைநடைப் பகுதிகள், உரையாடல்கள், கட்டுரைகள், அறிவிப்புகள், பாடல்கள், கதைகள் ஆகியவற்றைப் படித்துப் புரிந்து கொண்டு செறிவான சொல்வளத்தைப் பெறுவர். | மாணவர்கள் முழு வாக்கியங்களில் பதில் எழுதுவர். படங்களையும், உதவிச் சொற்களையும் பயன்படுத்திச் சிறு கட்டுரைகளை எழுதுவர். |

| கற்றல் விளைவுகள் - ஆறாம் வகுப்பின் இறுதியில் | | | |
|---|---|---|---|
| **கேட்டல்** | **பேசுதல்** | **படித்தல்** | **எழுதுதல்** |
| மாணவர்கள் பேச்சுத் தமிழுக்கும், எழுத்துத் தமிழுக்கும் உள்ள வேறுபாட்டினை உணர்வர். கலந்துரையாடல்கள், கதைகள், அறிவிப்புகள், செய்திகள், பழமொழிகள், செய்யுள்கள் ஆகியவற்றைக் கேட்டுப் புரிந்து கொள்வர். | மாணவர்கள் சரியான உச்சரிப்புடன், தன்னம்பிக்கையுடன் தெளிவாகப் பேசுவர். பல்வேறு தலைப்புகளில் பேசுவர். உரையாடல்களில் கலந்து கொள்வர். கதை சொல்வர். நடித்துக் காட்டுவர். திருக்குறள், கொன்றை வேந்தன், வெற்றி வேற்கை, நல்வழி, பாரதியார் பாடல்கள் போன்றவற்றை ஒப்பிப்பர். | மாணவர்கள் சரியான உச்சரிப்புடன், ஏற்ற இறக்கத்துடன், சரளமாகப் படிப்பர். பல்வேறு உரைநடைப் பகுதிகள், கட்டுரைகள், கடிதங்கள், பாடல்கள், தகவல்கள், கதைகள் ஆகியவற்றைக் குறைந்த உதவியுடன் புரிந்து கொள்வர். | மாணவர்கள் சொல்வளம் பெருக்கி, வாக்கிய அமைப்புகளைப் புரிந்து கொண்டு கட்டுரைகளையும், கடிதங்களையும் எழுதுவர். |

## 3.2 உயர் நிலை (வகுப்புகள் 7 - 10)

| கற்றல் விளைவுகள் - பத்தாம் வகுப்பின் இறுதியில் | | | |
|---|---|---|---|
| **கேட்டல்** | **பேசுதல்** | **படித்தல்** | **எழுதுதல்** |
| மாணவர்கள் எந்த இயல் சம்பந்தப் பட்டதாயிருப்பினும் காதால் கேட்கும்பொழுது புரிந்துகொள்வர். சொல் வளத்தை அதற்கு ஏற்ற மாதிரி பெருக்கிக் கொள்வர். கட்டளைகளைப் பின் பற்றுவர். | மாணவர்கள் பலவிதமான பனுவல்களைக் கருத்தூன்றிக் கேட்டும், படித்தும் பேச்சுத் தமிழிலும், எழுத்துத் தமிழிலும் தாம் விளங்கிக் கொண்டதை வெளிப்படுத்துவர். அந்தந்தச் சூழ்நிலைக்கு ஏற்ற சொற்களை உபயோகப்படுத்திக் கருத்துப் பரிமாற்றம் செய்வர். கேட்போரின் வயது, அனுபவம் இவற்றிற்கு ஏற்ற மாதிரி சொற்களை உபயோகப்படுத்தித் தம் கருத்தை விளக்குவர். தகுந்த ஆதாரங்களுடன் தம்முடைய கருத்தை எடுத்துரைத்து விவாதம் செய்வர். இலக்கியங்களை மதிப்பீடு செய்தும் பேசுவர். | மாணவர்கள் பேச்சுத் தமிழாயிருப்பினும் எழுத்துத் தமிழாயிருப்பினும் சரளமாகப் படிப்பர். முன்னறிவோடு இணைத்துப் புரிந்துகொள்வர். பனுவலின் முக்கிய கருத்தையும் அதற்கான ஆதாரங்களையும் அடையாளம் கண்டு கொள்வர். பனுவல் சம்பந்தமான பல தரவுகளைப் படித்துத் தகவல்களைத் திரட்டுவர். கருத்துக்கும், தகவலுக்கும் உள்ள தர்க்கரீதியான தொடர்பைப் புரிந்துகொள்வர். கருத்தைப் பல கோணங்களிலிருந்து பார்த்துத் தாமே ஒரு முடிவுக்கு வருவர். | மாணவர்கள் தாம் கேட்டும், படித்தும் புரிந்துகொண்டதை எழுத்துத் தமிழில் வெளிப்படுத்துவர். இடத்திற்கு ஏற்றவாறு சொற்கள், சொற்றொடர்கள், உவமைத் தொடர்கள், இணைமொழிகள், பழமொழிகள் ஆகியவற்றைப் பயன்படுத்துவர். பல்வேறு ஊடகங்களிலிருந்து தகவல் திரட்டித் தம் கருத்தோடு இனைத்து எழுதுவர். படிப்போர் புரிந்து கொள்ளும்படி எழுதுவர். அது கோர்வையாக இருக்கும்; பத்திகள் ஒன்றுக்குகு ஒன்று தொடர்புடையதாக இருக்கும். |

## 4 நூல் மூலங்கள்

### பாலர் நிலை:

- லட்சுமி தமிழ் பயிலும் மையத்தில் ஆசிரியர்களால் உருவாக்கப்பட்ட பயிற்சிப்புத்தகங்கள், ஒளிக்காட்டல்கள்

### வகுப்புகள் 7 - 10:

### சிங்கப்பூர்ப் புத்தகங்கள் (அந்தந்த வகுப்புக்கானவை):

- தமிழ் ஓசை பாடநூல்
- தமிழ் ஓசை பயிற்சி நூல்
- மொழி வளம்
- கருத்தறிதல்
- கட்டுரைப் பயிற்சி
- கதைப் புத்தகங்கள்
- தேர்வுத் தாள்கள்

### மற்றவை:

- தமிழ் நாடு பாடப் புத்தகங்கள், தமிழ் இணையப் பல்கலைக் கழகம், மற்றும் சில இணைய தளங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பத்திகள்/கதைகள்
- கதை அருவி வரிசை, சட்டநாத் அறக்கட்டளை, தமிழ் நாடு

### வகுப்புகள் 6 - 10: (நிலைக்கேற்றாற் போல் தேர்ந்தெடுக்கப் பட்ட பாடங்கள்)

- Tamil for Beginners Part I & II (Reading and Writing & Grammar) by Kausalya Hart
- A Basic Tamil Reader and Grammar by K. Paramasivam and James Lindholm
- The “Jim and Raja” Conversations by K. Paramasivam and James Lindholm

## 5 மதிப்பீட்டு முறைகள்

மாணவர்களின் பகுப்புத்திறனையும் (analytical) பிரயோகத்திறனையும் (application) கண்டறிய / அளவிட ஆசிரியர்கள் பல வகைப் பிரத்தியேகச் சோதனை முறைகளைக் கையாள்கிறார்கள் (unique tests).

வாராந்திரச் சோதனைகள், இடைக்காலத் தேர்வுகள், கல்விப்பருவ இறுதிச் சோதனைகள் ஆகியவை மாணவர்களின் கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் ஆகிய நான்கு நிலைகளில் மாணவர்கள் எய்தியுள்ள நிலையைத் துல்லியமாக எடுத்துக்காட்டுகின்றன. ஒவ்வொரு மாணவரும் குறைந்தபட்சம் 70 சதவிகித மதிப்பெண் பெற்றால் அந்நிலையில் தேர்ச்சி பெற்றவராகக் கருதப்படுவார்.

வகுப்பில் கற்றதை மேலும் பயிற்சி செய்யும் வகையில் வீட்டுப் பாடங்கள் கொடுக்கப்படுகின்றன. பாலர் வகுப்புகளில் மாணவர்களின் பேசும் திறனை மேம்படுத்தும் பொருட்டு ஒவ்வொரு வாரமும் அவர்கள் ஏதேனும் ஒரு தலைப்பில் (ஆசிரியரால் தேர்ந்தெடுக்கப்பட்ட) பேச வைக்கப்படுகிறார்கள். நடு, உயர் நிலைகளில் கலந்துரையாடல்கள் நடத்தப்படுகின்றன. கடிதம் எழுதுதல், கட்டுரை எழுதுதல், கவிதை கற்றல், கதைகள் படித்தல் ஆகிய திட்ட வேலைகளும் அவ்வப்பொழுது கொடுக்கப்படுகின்றன. உயர்நிலை வகுப்பு மாணவர்கள் கதை / நூல் மதிப்பீடுகள் எழுதுதல், ஆய்வுக்கட்டுரைகள் எழுதுதல் (தமிழ் வலைத் தளங்களிலிருந்து தகவல் திரட்டி) ஆகிய ஒப்படைப்புகளும் (assignments) செய்கிறார்கள்.

மாணவர்களின் மேடைப் பேச்சுத்திறனை வளர்க்கும் பொருட்டு ஒவ்வொரு கல்வியாண்டிலும் மூன்று பேசும், படிக்கும் போட்டிகள் நடத்தப்படுகின்றன. ஒவ்வொரு வருடமும் ஆண்டுவிழாவன்று காட்டியங்கள் போட்டி நடத்தப்படுகிறது, மாணவர்கள் ஆசிரியர்களால் குறிப்பிடப்பட்ட ஏதேனும் ஒரு தலைப்பில் ஆய்வு செய்து காட்டியத்தைத் தயார் செய்வர். சிறப்பானவற்றிற்குப் பரிசுகளும் வழங்கப்படுகின்றன.